**வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் (பொ) செயல்முறைகள்**

**ந.க.எண்.4057/ஆ5/2025, நாள்.29/08/2025**

.....

பொருள் பள்ளிக் கல்வி – தமிழ்நாடு அறிவியல் இயக்கம் – ~~2024~~–2025ஆம் கல்வியாண்டு – குழந்தைகள் அறிவியல் மாநாடு நடைபெறுதல் – அறிவியல் வழிகாட்டி ஆசிரியர்களுக்கான ஒரு நாள் பயிற்சி முகாம் நடைபெறுதல் – பயிற்சியில் கலந்துக்கொள்ள தெரிவித்தல்– சார்பு

பார்வை
1. சென்னை – 6, பள்ளிக் கல்வி இயக்குநரின் கடித ந.க.எண்.051938/எம்2/இ2/2025, நாள். 07.08.2025
2. வேலூர் மாவட்டம், தமிழ்நாடு அறிவியல் இயக்கம், செயலாளர் கடித நாள். 25.08.2025

•••••

மாணவர்கள் மத்தியில் அறிவியல் மற்றும் ஆய்வு மனப்பான்மையை வளர்க்கும் நோக்கில் தமிழ்நாடு அறிவியல் இயக்கம் (TNSF) வருடந்தோறும் தேசிய குழந்தைகள் அறிவியல் மாநாட்டினை நடத்தி வருகிறது. இந்த வருடம் (2025) "நீடித்த நிலையான நீர் மேலாண்மை" (நீர் கல்வி) என்கிற கருப்பொருளில் 10 முதல் 17 வயதுள்ள குழந்தைகள் வழிகாட்டி ஆசிரியரின் மேற்பார்வையில் ஆய்வுகளை மேற்கொண்டு டிசம்பர் மாத இறுதியில் நடைபெறும் மாவட்ட மாநாட்டில் தங்களது ஆய்வறிக்கைகளை சமர்பிக்க ஏதுவாக ஆய்வுகளை மேற்கொள்ளும் குழந்தைகளின் வழிகாட்டி ஆசிரியர்களுக்கு முதற் கட்டமாக ஒரு நாள் பயிற்சி முகாம் கீழ்காணும்படி நடைபெறவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

| வ. எண். | நிகழ்விடம் | நடைபெறும் நாள் | நேரம் |
|---|---|---|---|
| 1 | டி.கே.எம். மகளிர் தன்னாட்சி கல்லூரி, சாய்நாபுரம், வேலூர் மாவட்டம் | 02.09.2025 (செவ்வாய் கிழமை) | காலை 10.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை |

எனவே மேற்காணும் படி நடைபெறவிருக்கும் ஒரு நாள் பயிற்சியில் அரசு / அரசு நிதியுதவி பெறும் நடுநிலை / உயர்நிலை/ மேல்நிலைப் பள்ளிகள் மற்றும் தனியார் பள்ளியிலிருந்து ஒரு அறிவியல் ஆசிரியரை பயிற்சியில் கலந்து கொள்ள உரிய நடவடிக்கை மேற்கொள்ள மாவட்டக் கல்வி அலுவலர்கள் (இடைநிலை / தனியார் பள்ளிகள் / தொடக்கக் கல்வி) கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

முதன்மைக் கல்வி அலுவலர் (பொ),
வேலூர்.

பெறுநர் –

1. மாவட்டக் கல்வி அலுவலர்கள்,
   (இடைநிலை / தனியார் பள்ளிகள் / தொடக்கக் கல்வி)
   வேலூர் மாவட்டம்.
   (இவ்வலுவலக மின்னஞ்சல் மூலமாக)
2. தலைமையாசிரியர்கள் / முதல்வர்கள்,
   அரசு / அரசு உதவிபெறும் நடுநிலை /உயர் / மேல்நிலைப் பள்ளிகள் / தனியார் பள்ளிகள், வேலூர் மாவட்டம்.
   (சார்ந்த மாவட்டக் கல்வி அலுவலர் மூலமாக)

நகல்–

மாவட்ட ஒருங்கிணைப்பாளர்,
தமிழ்நாடு அறிவியல் இயக்கம், வேலூர் மாவட்டம்.